# இலங்கை வங்கி

உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 500 மிகப்பெரிய வங்கிகளுள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ள அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம் தர வங்கியுமாகிய இலங்கை வங்கியின் சட்டப்பிரிவில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையும் ஆற்றலும் ஊக்கமும் அனுபவமும் கொண்ட இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## நீதிமன்ற எழுதுவினைஞர் பயிலுநர் மற்றும்
## நொத்தாரிசு எழுதுவினைஞர் பயிலுநர்

### தேவைப்படும் தகைமைகள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.**

➢ **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

- க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், ஆங்கிலம் மற்றும் தாய்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தி (விருப்புக்குரிய பாடங்கள் நீங்கலாக)

**மற்றும்**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர்ந்த)

**மற்றும்**

- சட்ட நிறுவனமொன்றில் அல்லது சட்டத்தரணி ஒருவரிடம் நீதிமன்ற எழுதுவினைஞராக/ நொத்தாரிசு எழுதுவினைஞராக இரண்டு (02) வருடங்கள் பணியாற்றிய அனுபவம்

➢ **ஏனைய தகைமைகள்**

- ஆங்கிலம் மற்றும் தமிழ்/சிங்களம் ஆகிய மொழிகளில் நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற தட்டச்சு வேகம்
- கணனி அறிவும் ஆங்கில மொழியில் தேர்ச்சியும் அத்தியாவசியமாகும்

➢ **வயது**

- விண்ணப்ப முடிவுத் திகதியில் 35 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகளாகும் இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவொன்று (முதலாம் வருடம் ரூபா 45,000 மற்றும் இரண்டாம் வருடம் ரூபா 60,000) வழங்கப்படும்.
- இப்பதவி வங்கிச் சேவையின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய காணப்படினும் சாதாரண வங்கியியல் துறைக்குப் புறம்பானதாகும் (மூடிய சேவை)
- பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் நீதிமன்ற எழுதுவினைஞர்-I/ நொத்தாரிசு எழுதுவினைஞர்-I என்ற தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்
- தேவைப்படும்போது வார இறுதி/விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்

### தெரிவு நடைமுறை

❍ போட்டிப் பரீட்சையினைத் (எழுத்துப் பரீட்சை மற்றும் வேகப்பரீட்சை) தொடர்ந்து பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

❍ போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்முகத் தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியற்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

உங்களது சுயவிபரக் கோவையினை **www.boc.lk** என்ற எங்களது இணையத்தள முகவரியூடாக (**careers** என்ற பகுதியின் கீழ்) தரவிறக்கம் செய்யக்கூடிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக பூர்த்தி செய்து உறவுமுறைசாராத இரண்டு நபர்களின் தொடர்பு விபரங்களுடனும் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளுடனும் **13.08.2022ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

விண்ணப்பத்தின் முடிவுத் திகதியில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கொண்டிராத அல்லது உண்மைக்குப் புறம்பாக தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி,**
**மனித வளப் பிரிவு,**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**“இலங்கை வங்கிசதுக்கம்”,**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை,**
**கொழும்பு-01.**

*தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.*

*தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.*

*நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பை பிற்போடும்/இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.*

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்